யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூலை - 2015
# Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | புவியியல் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I இல் முதலாம் வினாவிற்கும், பகுதி II இல் முதலாம் வினாவிற்கும், பகுதி III இல் "அ" பகுதியில் இரு வினாக்களையும் "ஆ" பகுதியில் இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I


**1) 1 - 25 வரையான பல்தேர்வு வினாக்களுக்கு 1, 2, 3, 4, 5 என விடைகள் தரப்பட்டுள்ளன. மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டகூட்டில் சரியான இலக்கத்தில் அடையாளப்படுத்துக.**

1) புவியியல்சார் அமைவிட முறைமை (GPS) அறிமுகப்படுத்திய நாடு
1) பிரித்தானியா 2) ஐ. அமெரிக்கா 3) ஜப்பான்
4) ஜேர்மனி 5) ரஷ்சியா ( )

2) 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் 100km$^2$ பரப்பளவுள்ள ஒரு பிரதேசத்தின் நீளம் அகலம் முறையே செ.மீ தருக.
1) 20cmx20cm 2) 10cmx10cm 3) 12cmx12cm
4) 8cmx8cm 5) 100cmx100cm ( )

3) ஓர் அங்குல இடவிளக்கப் படத்தின் அளவுத்திட்டத்தைக் காட்டுவது?
1) 1:126720 2) 1:25000 3) 1:100000
4) 1:50000 5) 1:63360 ( )

4) புள்ளிவிபரத் தரவுத்தொகுதி ஒன்றின் மையப்போக்கு அளவீடுகளாக
1) சராசரி, ஆகாரம், மீடிறன் 2) சராசரி, ஆகாரம், இடை
3) இடையம், இடை, ஆகாரம் 4) இடை, மீடிறன், திரள்மீடிறன்
5) விலகல், இடை, காலனைவீச்சு ( )

5)


glk; I

படம் I இல் A - B, C - D, E - F ஆகிய கோடுகள் குறிக்கும் நிலவுருவம்
1) சுவடு, பள்ளத்தாக்கு, குன்று
2) பள்ளத்தாக்கு, சுவடு, கூம்புக்குன்று
3) பள்ளத்தாக்கு, சுவடு, தொடரலை நிலம்
4) தொடரலை நிலம், பள்ளத்தாக்கு, சுவடு
5) ஆற்றுப்பள்ளத்தாக்கு, சுவடு, தொடரலைநிலம் ( )

6) தாழ்நிலத்திலிருந்து உயர்நிலத்தை நோக்கிச் செல்லும் போது சமவுயரக்கோடு ஆரம்பத்தில் ஐதாகவும் மத்தியில் நெருக்கமாகவும் மீண்டும் ஐதாகவும் அமைந்திருப்பதால் உருவாகும் சாய்வு
1) மென்சாய்வு 2) குத்துச்சாய்வு 3) குழிவுச்சாய்வு
4) குவிவுச் சாய்வு 5) சரிவுச்சாய்வு ( )

7)



மேலே காட்டப்பட்ட நேர்கோட்டு அளவுத்திட்டத்திற்குரிய அளவுத்திட்டமாக அமைவது
1) 1 : 25000 2) 1 : 5000 3) 1 : 100000
4) 1 : 10000 5) 1 : 40000 ( )

8) இரு பிரதான ஆறுகள் இணையும் இடம்

1) கிளையாறு 2) பின்னிய ஆறு 3) ஆற்றுத்தீவு
4) ஆற்றுச்சங்கமம் 5) ஆற்றுமுகத்துவாரம் ( )

9) பால் வயது அடிப்படையிலான குடிவிபரணவியல் தரவுத்தொகுதியைக் காட்டுவதற்கு உகந்த படவரைக் கலை

1) பார்வரைப்படங்கள் 2) நிரல் வரைப்படங்கள் 3) கோட்டுவரைபடங்கள்
4) பிரமிட்வரைப்படம் 5) கூட்டுபார் வரைப்படம் ( )

10) பெரும்பாலும் விவசாயப் பிரதேசங்களில் அமைந்த குடியிருப்பு, வீதியின் இரு மருங்கிலும் அமைந்த குடியிருப்பு, தேயிலைத் தோட்டங்களில் அமைந்த குடியிருப்பு என்பன முறையே குறிப்பது

1) தோட்டக்குடியிருப்பு, வீதிக்குடியிருப்பு, பெருந்தோட்டக் குடியிருப்பு
2) சிதறிய குடியிருப்பு, நாடாக் குடியிருப்பு, பெருந்தோட்டக் குடியிருப்பு
3) விவசாய குடியிருப்பு, வீதிக்குடியிருப்பு, பெருந்தோட்டக் குடியிருப்பு
4) பண்ணைக் குடியிருப்பு, போக்குவரத்துக் குடியிருப்பு, மலை நாட்டுக் குடியிருப்பு
5) விவசாய குடியிருப்பு, பெருந்தெரு குடியிருப்பு, வர்த்தக பயிர்ச்செய்கை குடியிருப்பு ( )

11) வளிமண்டலத்தின் நிலைக்குத்து படையாக்கத்தின் அடிப்படையில் புவியின் மேற்பரப்பிற்கு அண்மித்த படையாக இருப்பது

1) வெப்பமண்டலம் 2) படைமண்டலம் 3) இடைமண்டலம்
4) மாறன்மண்டலம் 5) அயன்மண்டலம் ( )

12) தகடாகும் பாறை, சலவைக்கல், பளிங்குப்பட்டைப் பாறை ஆகிய மூன்று வகையான பாறைகளும் பொதுவாகத் தொடர்புபடுவது

1) தீப்பாறைகளுடன் 2) உருமாறிய பாறைகளுடன்
3) அடையற்பாறைகளுடன் 4) தீப்பாறைகளுடனும் அடையற்பாறைகளுடனும்
5) அடையற்பாறைகளுடனும் உருமாறிய பாறைகளுடனும் ( )

13) வற்றுப்பெருக்கு ஏற்பட பிரதானமான காரணமாயிருப்பது

1) சமுத்திர உயர் அமுக்கம்
2) சமுத்திர நீரோட்டங்கள்
3) சூரியன், சந்திரன் ஆகியன ஈர்ப்பு விசையால் இழுக்கப்படுதல்
4) வலிமைமிக்க காற்றுக்கள் சமுத்திர மேற்பரப்பில் வீசுதல்
5) ஆறுகள் கடலில் கலத்தல் ( )

14) நிலக்கரி உருவாக்கத்துடன் முக்கியமாகத் தொடர்புபட்ட புவிச்சரிதவியல் காலம்

1) கேம்பிரியாவிற்கு முந்திய காலம் 2) காபோனிபரஸ் காலம்
3) யூராசிக்காலம் 4) மயோசின் காலம்
5) பிளைத்தோசின் காலம் ( )

15) பாலைவனமொன்றில் கடும் மழை பெய்த பின்னர் நீர் வழிந்து செல்லும் ஒரு வழியாக அமைவது

1) பாலைவன மணற் குன்றுகள் 2) வாடி 3) பிளேயா
4) பிறையுருமணற்குன்று 5) சேற்றுக் கழிமுகம் ( )

16) பின்வருவனவற்றுள் பனிக்கட்டி படிவினால் உருவாக்கப்படும் நிலவுருவம் யாது?

1) கூர் முடி 2) நீள்மணற்குன்று 3) செம்மறியுருப்பாறை
4) வட்டக் குகை 5) குத்துப்பாறை வாற்குன்று ( )

17) கரீபியன் கடலின் கரையோரப் பிரதேசத்தில் தோன்றும் அயன மண்டலச் சூறாவளி யாது?

1) தைப்பூன் சூறாவளி 2) தொனாடோ சூறாவளி
3) வில்லி - வில்லீஸ் சூறாவளி 4) ஹரிக்கேன் சூறாவளி
5) சைக்குளோன் சூறாவளி ( )

18) 2004 ஆம் ஆண்டு சுனாமி அழிவால் பெரிதும் பாதிக்கப்பட்ட நான்கு நாடுகளைக் காட்டும் விடை யாது?

1) இலங்கை, இந்தோனேசியா, அவுஸ்ரேலியா, இந்தியா
2) இலங்கை, இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து
3) இலங்கை, பிலிப்பைன்ஸ், யப்பான், இந்தோனேசியா
4) இலங்கை, மலேசியா, யப்பான், இந்தோனேசியா
5) மியன்மார், தாய்லாந்து, இலங்கை, இந்தோனேசியா ( )

19) உயிர்ப்பல்வகைமை என்பதன் வரைவிலக்கணம்
1) நில அலகு ஒன்றிலுள்ள தாவரங்களினதும் முலையூட்டிகளினதும் பன்முகப் பண்பு
2) நிலஅலகு ஒன்றிலுள்ள தாவரங்களினதும் ஈருடக வாழ்வுள்ளவற்றினதும் பன்முகப் பண்பு
3) நில அலகு ஒன்றிலுள்ள மூலிகைகளினதும் மண் உயிரினங்களினதும் பன்முகப் பண்பு
4) நில அலகு ஒன்றிலுள்ள தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகளது பன்முகப்பண்பு
5) மேற்கூறிய அனைத்தும் ( )

20) இலங்கையின் முதலாவது ரம்ஸா ஈரநிலமானது
1) கொக்கிளாய் கடனீரேரி 2) புந்தளதேசிய பூங்கா 3) முத்துராஜவெல
4) மட்டக்களப்பு கடனீரேரி 5) யாழ்ப்பாணக் கடனீரேரி ( )

21) உலக சனத்தொகையில் ஏறத்தாழ 1667 மில்லியன் பேர் வழிபடும் சமயம் யாது?
1) பௌத்தம் 2) இஸ்லாம் 3) கிறிஸ்தவம்
4) யூதம் 5) ஷின்ரோ பௌத்தம் ( )

22) 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் படி இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம்
1) 0.1 % 2) 1.7% 3) 1.5%
4) 0.6% 5) 2.7% ( )

23) வயது கட்டமைப்பில் உழைப்போர் வயது கட்டமைப்பு யாது?
1) 0 - 14 வயது 2) 0 - 15 வயது 3) 15 - 65 வயது
4) 65 வயதுக்கு மேல் 5) 15 வயதிற்கு மேல் ( )

24) குறித்த ஆண்டினுள் நிகழும் உயிருடன் பிறக்கும் குழந்தைகள் பிறந்து ஒரு வருடத்துக்குள் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை
1) சிசு மரண வீதம் 2) பருமட்டான இறப்பு வீதம் 3) தாய்மரண வீதம்
4) ஆண் குழந்தை இறப்பு வீதம் 5) இயற்கை அதிகரிப்பு வீதம் ( )

25) ''மனிதன் மற்றும் சூழலுக்கு இடையிலான தொடர்பு பற்றிய கற்கை புவியியலின் இயல்பு'' என குறிப்பிட்டவர்
1) கால்றிட்டர் 2) றிச்சட் ஹாட்சோன் 3) லாப்பிளாஸ்
4) பியர்சன் 5) ஜேம்ஸ்ரெயிலர் ( )

(25 x 1 = 25 புள்ளி)

## பகுதி II

**1) தரப்பட்ட 1:50000 சமவுயரக்கோட்டு தேசப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) தேசப்படத்தில் இனம் காணக்கூடிய தரைத்தோற்ற சாய்வுகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
2) மேற்கு எல்லையிலிருந்து கிழக்கு எல்லை வரை பாய்ந்து செல்லும் நதியின் மத்தியில் வரையப்பட்டுள்ள அரசியல் எல்லையைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
3) இப்பிரதேசத்தின் மேற்கு எல்லையில் வடக்கிலிருந்து தெற்கு வரை செல்லும் அரசியல் எல்லையைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
4) பிரதான வீதி செல்லுகின்ற பள்ளத்தாக்கின் பெயரைக் கூறுக. (1 புள்ளி)
5) சமாந்தர பாறைத் தொடர்களின் இடையே அமைந்துள்ள பள்ளத்தாக்குகள் இரண்டையும் கூறுக (2 புள்ளி)
6) மேற்கு - கிழக்காகச் செல்லும் நதியில் இனம் காணக்கூடிய வடிகால் அம்சங்கள் இரண்டைக் கூறுக. (2 புள்ளி)
7) படப்பரப்பினுள் இனம் காணக்கூடிய புள்ளியியல் ரீதியான பண்பாட்டு அம்சங்கள் ஐந்து கூறுக. (2½ புள்ளி)
8) இப்பிரதேசத்தின் வடிகால் பாங்கு யாது? (½ புள்ளி)
9) இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கிராமிய பயிர் செய்கைகள் இரண்டினையும் கூறுக. (2 புள்ளி)
10) இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பிரதான பெருந்தோட்டப் பயிர்கள் இரண்டையும் கூறுக. (1 புள்ளி)

## பகுதி III

### "அ" பகுதி

**1)** 1) உயிர்கோள ஒழுங்கமைப்பின் மட்டங்களைக் கூறுக. (2 புள்ளி)
2) உயிர்கோள ஒழுங்கமைப்பில் செல்வாக்குச் செலுத்தும் இரு கூறுகள் யாவை? (2 புள்ளி)
3) உணவுச்சங்கிலி, உணவுவலை என்பவற்றைச் சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளி)
4) உணவுச்சங்கிலியின் ஏதாவது இரு தொடுப்புக்கள் துண்டிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகளை விபரிக்குக? (5 புள்ளி)

**2)** 1) ஆறு உற்பத்தியாகும் இடத்திலிருந்து கடலில் சங்கமமாகும் இடம் வரை நீள்பக்கப்பார்வையில் அதன் மூன்று பிரதான பகுதிகளையும் கூறுக. (3 புள்ளி)
2) உற்பத்தியாகி ஓடும் ஆற்றின் செயற்பாடுகள் மூன்றையும் கூறுக. (3 புள்ளி)
3) ஆற்றின் அரித்தல் நிலவுருவங்கள் இரண்டை வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக. (5 புள்ளி)
4) ஆற்றினது படிதல் நிலவுருவம் இரண்டை வரைபடங்களின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)

**3)** 1) புவிநடுக்கம் என்றால் என்ன? (3 புள்ளி)
2) புவிநடுக்க அலைகள் மூன்றையும் கூறுக. (3 புள்ளி)
3) பிரதான புவிநடுக்க அலைகள் இரண்டையும் சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளி)
4) புவிநடுக்கத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் இரண்டை விபரிக்குக. (5 புள்ளி)

**4)** 1) தொகுதி என்றால் என்ன? (3 புள்ளி)
2) வளிமண்டல தொகுதியின் நான்கு படைகளையும் கூறுக. (4 புள்ளி)
3) வளிமண்டலத்தின் பிரதான வாயுக்கள் மூன்றையும் கூறுக. (2 புள்ளி)
4) பசிய இல்ல வாயுக்களின் அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகள் மூன்றினைச் சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளி)

### பகுதி - "ஆ"

**5)** 1) சனத்தொகை என்றால் என்ன? (3 புள்ளி)
2) உலகில் குடித்தொகை அடர்த்தி கூடிய மூன்று பிரதேசங்களைக் கூறுக. (3 புள்ளி)
3) நீர் குறிப்பிட்ட ஏதாவது ஒரு பிரதேசத்தை தெரிவு செய்து அங்கு குடி அடர்த்தி கூடுதலாக இருப்பதற்கான காரணங்கள் நான்கினைக் கூறுக. (4 புள்ளி)
4) சனத்தொகை தொடர்பான பிரச்சினைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

**6)** 1) குடிபெயர்வு என்றால் என்ன? (3 புள்ளி)
2) குடிபெயர்வின் இரு பிரிவுகளையும் கூறுக. (2 புள்ளி)
3) குடிபெயர்வுக்கான பௌதீகக் காரணிகள் இரண்டையும் மானிடக் காரணிகள் இரண்டையும் கூறுக. (4 புள்ளி)
4) வினா (III) இல் குறிப்பிட்ட பௌதீகக் காரணி ஒன்றையும் மானிடக் காரணி ஒன்றினையும் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

**7)** 1) இலங்கையில் குடி அடர்த்தி கூடிய மூன்று மாவட்டங்களைக் கூறுக?. (3 புள்ளி)
2) இலங்கையின் குடி அடர்த்தி குறைந்த மூன்று பிரதேசங்களைக் கூறுக. (3 புள்ளி)
3) இலங்கையின் சனத்தொகைப் பரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கினைக் கூறுக. (4 புள்ளி)
4) இலங்கையின் சனத்தொகைப் பரம்பலை மறுசீரமைப்பதில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டை விளக்குக. (5 புள்ளி)

**8)** 1) குடியிருப்பு என்றால் என்ன? (3 புள்ளி)
2) கிராமிய குடியிருப்புக்கள் மூன்றையும் கூறுக. (3 புள்ளி)
3) கிராமிய குடியிருப்புக்கள் நகரக்குடியிருப்புக்களுக்கு இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் கூறுக. (4 புள்ளி)
4) கொத்தணிக் குடியிருப்பு, நாடாக்குடியிருப்பு என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)